***கவனிக்க.***- *3.5.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1810 - 2013 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2013.05.10

*1810 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 637 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 640 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 634 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- (i) *மீள குடியமர்த்துதல் அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***கவனிக்க.***- *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டு பகுதிக்கான (ஏப்பிறல்-யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றன.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2013/2014

(கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2014 யூன் மாதம் வரை)

2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளுவிற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளை குத்தகை விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. எந்தவொரு பிரதேசச் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப்பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதன் இடப்பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டு 2013.05.28 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2013.05.28 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகமல் தவறணைகள் ஏதும் இருப்பின் இவற்றுக்கான மீள்விற்பனை 2013.06.11 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேசச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எம். எஸ். பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை.
2013.04.22.

### அட்டவணை

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01 | பிடிகல் கோரலை பம்பல வடக்கு | பம்பல | 2013.05.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணி | 1,000.00 |

5-194

## ஆராச்சிக்கட்டு பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2013/2014

*(2013 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)*

2013 ஆம் வருடம் யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2014 ஆம் வருடம் யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைத்துள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**நிபந்தனைகள்:**

1. (அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களினதும் பொது நிபந்தனைகளுக்கும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகையிடும் நிபந்தனைகளுக் கமைவாகவும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களின் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைய ஆரச்சிக்கட்டு பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பத் தொகையில் 15 சதவீதம் பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழ்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பெயரிடப்பட்டு உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு :

"................. இலக்கமுள்ள ................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

எனக் குறிப்பிட வேண்டும். 2013.05.22 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதையிடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான குத்தகையிடும் நிபந்தனைகளுக்கமைய இடல் வேண்டும்.

5. 2013 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும். குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆந் திகதி முற்பகல் 10.00 மணியளவில் மறு விற்பனைக்காக விடப்படும். அன்றைய தினம் ஏல முன் வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாகும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எஸ். எஸ். லூசேனா,
பிரதேச செயலாளர்,
ஆராச்சிகட்டு.

எனது இலக்கம் : ஏஆர்/ஏ/1/8/1
பிரதேச செயலகம்,
ஆராச்சிக்கட்டு,
22.04.2013.

**அட்டவணை**

| பிரதேசம் | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆனைவிழுந்தன் பற்று | கருக்குப்பனை | 10 | 2013, மே மாதம் 22 ஆந் | 250 0 |
| ஆனைவிழுந்தன் பற்று | ஆராச்சிக்கட்டுவ | 11 | திகதி மு. ப. 10.00 மணி | 250 0 |
| ஆனைவிழுந்தன் பற்று | பத்துலுஓய | 12 | | 250 0 |

5-192

### சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2013/2014

2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு:

"......................................... இலக்கமுள்ள ......................................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

எனக் குறிப்பிட்டு 2013.05.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.

5. 2013.05.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அவ்வேளை கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதுமிருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2013.06.05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2013.04.22.

#### அட்டவணை

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் ந. வட் இலக்கம் 2 | ஈச்சம்பிடிய | 2013.05.21 மு. ப. 10.00 | 2,000 |
| 2. | சிலாபம் ந. வட் இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2013.05.21 மு.ப. 10.00 | 1,000 |
| 3. | பிடிகல கோரல | ஒலிதலுவ | 2013.05.21 மு. ப. 10.00 | 250 |

5-223

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஐ. எம். எஸ். சொப்ட்வெயார் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 92141
*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2013, ஏப்பிறல் 18
*முகவரி* : இல. 47, புனித லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை

கம்பனி பணிப்பாளர்.

5-128

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாண கண்டி மாவட்டத்தில் கலஹா பிரதான வீதி, இலக்கம் 92 இல் வசிக்கும் ஸேதாரி முதியன்ஸெலாகே சமரகோன் (தே. அ. அ. இல. : 182910821V) ஆகிய நான், சப்பிரகமுவ மாகாண, கேகாலை மாவட்டத்தில், கேகாலை மீப்பிட்டிய, இலக்கம் 714ஏ இல் வசிக்கும் யாப்பா பத்திரென்னெஹெலாகே லலித் ஹேமசந்திர (தே. அ. அ. இல. : 610233732V) என்பவருக்கு மாத்தளை பிரசித்திபெற்ற நொத்தாரிசு பீ. எஸ். எம். குமாரி ரத்நாயக்க என்பவரால் எழுதி உறுதிசெய்யப்பட்ட இலக்கம் 3 மற்றும் 2011.06.18 ஆந் திகதியுடைய அற்றோணி அதிகாரப்பத்திரத்தின் மூலம் என்னால் வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2012.06.15 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டு விட்டதாக இத்துடன் அனைவருக்கும் அறித்தருகிறேன். அதன் மீது அவர்கள் எனக்காகச் செய்கின்ற எந்தச் செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்புதாரி அல்ல என்பதனையும் இத்துடன் அறியத் தருகிறேன்.

ஸேதாரி முதியன்ஸெலாகே சமரகோன்.

5-189

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

யாழ்ப்பாணம், கோண்டாவில் மேற்கு தற்போது கொழும்பு மாளிகாவத்தை, தேசிய வீடமைப்புத் திட்டம், இல. ஏ 16-1/2 இல் வசிக்கும் சின்னத்துரை சோதிராஜா மற்றும் பெண் அற்புதமேரி சோதிராஜா அல்லது அற்புதமேரி சின்னத்துரை ஆகிய நாங்கள் கொழும்பு 10, மாளிகாவத்தை, தேசிய வீடமைப்புத் திட்டம், இல. ஏ 16-1/2 இல் வசிக்கும் ரோமன் தெய்வநாயகி என்பவருக்கு 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். இமாம் முகதாவில் அத்தாட்சிப்படுத்திய 1246 ஆம் இலக்கத்தில் பதியப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தை மீளப்பெற்று அதில் உள்ள அதிகாரங்கள் அனைத்தையும் இரத்துச்செய்து செயலிழக்கச் செய்துவிட்டேன் என்று இத்தால் உறுதியாக அறிவிக்கிறோம்.

எஸ். சோதிராஜா.

5-216

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டி. ஜே. எட்வர்டைசிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 91750
*கூட்டிணைப்புத் திகதி* : 03.04.2013
*பதிவு முகவரி* : இல. 141/7ஏ, வொக்சோல் வீதி, கொழும்பு 02

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 02.

5-190

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தபால் பெட்டி இல. 22550, டோஹா கட்டாரைச் சேர்ந்த கட்டார் எயார்வேய்ஸ் (கியூ. சீ. எஸ். சீ.) பிரதம நிறைவேற்று அலுவலர் அக்பர் அல் பாக்கீர் ஆகிய நான் டோஹா கட்டார், இலங்கைத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் எச். எம். கே. ஹேரத் அத்தாட்சிப்படுத்தி கட்டார் அரசிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் புறக்குறிப்பு செய்யப்பட்டதும் 2010, மாச்சு 10 ஆந் திகதி அற்றோணி தத்துவத்தின் மூலம் கிப்போர்ட் கிறிஸ்டோபர் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமான அற்றோணி தத்துவம் 2013, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து இத்தால் என்னால் இல்லாதொழிக்கப்படுகின்றது எனவும் எமது அற்றோணி தத்துவக்காரர் என்ற தன்மையில் சொல்லப்பட்ட கிப்போர்ட் கிறிஸ்டோபர் என்பவரால் இனிமேல் செய்யப்படும் ஏதேனும் செயலுக்கு அல்லது செயற்பாட்டிற்கு நாம் பொறுப்பாளிகளாக மாட்டோம் எனவும் இத்தால் பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுக்கின்றோம்.

அக்பர் அல் பாக்கீர்.

5-214

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ரோஸ் ஹில் ஹோட்டெல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுவிலக்கம்* : பீவீ 91736
*கூட்டிணைப்புத் திகதி* : 25, மாச்சு 2013
*பதிவு முகவரி* : இல. 59, கிரகரீஸ் வீதி, கொழும்பு 07

சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

5-220/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கெல் சோலார் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுவிலக்கம்* : பீவீ 91795
*கூட்டிணைப்புத் திகதி* : 28, மாச்சு 2013
*பதிவு முகவரி* : இல. 59, கிரகரீஸ் வீதி, கொழும்பு 07

சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

5-220/2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 04, பம்பலப்பிட்டி, ஸ்ருப்பெரி தோட்டம், இல. 9ஏ, 2/6ஏ இல் வதியும் ராஜதுரை சண்முகராஜா ஆகிய நான் கொழும்பு 04, பம்பலப்பிட்டி, ஸ்ருப்பெரி தோட்டம், இல. 9ஏ, 2/6ஏ ஐச் சேர்ந்த சண்முகராஜா நிரோஷன் பெயரில் கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு சந்திரகி சிவதாசனினால் 2011.05.26 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 820 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இன்று முதல் செயலிழக்கச் செய்கின்றேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், இலங்கைப் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இன்று முதல் குறித்த அற்றோணித் தத்துவக்காரராகிய சண்முகராஜா நிரோஷனால் என் பெயரால் மேற்கொள்ளப்படும் எச்செயலுக்கோ கொடுக்கல் வாங்கல்களுக்கோ நான் பொறுப்பாளி யல்ல என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ராஜதுரை சண்முகராஜா.

5-290

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எகோவேவ் ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுவிலக்கம்* : பீவீ 91673
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, மாச்சு 21
*பதிவு முகவரி* : பிரதான வீதி, அறுகம்குடா, பொத்துவில்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

5-215

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நெக்ஸ்ட்ஜென் ஹெல்த்கெயா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 91820
*கூட்டிணைப்புத் திகதி* : 01.04.2013
*பதிவு முகவரி* : இல. 85/14ஏ, தெரலு உயன, பன்னிப்பிட்டி வீதி, பத்தரமுல்ல

செயலாளர்.

5-200

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 30/4, பாக் றோட், கொழும்பு 05 இல் வதியும் ருவன் நவின்ர சல்காது ஆகிய நான், இத்தால் சகலருக்கும் அறியத்தருவதாவது, 10.01.1997 ஆந் திகதியிட்டதும் அமெரிக்க அரசின் நொத்தாரிசுமான

மரியா மார்க்கற்றா றோஸ் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டதும் இல. 45, பிறேபுறூக் வீதி, கொழும்பு 02 ஐச் சேர்ந்த அன்றொயின் தியடோர் பிரியலால் எதிரிசிங்க, அனுர தேவபிரிய ஜயசேன ஆகியோருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை 19.03.2013 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்கின்றேன்.

ருவன் நவின்ர சல்காது.

5-284

---

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 20.03.2013 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : சிலோன் ஷிப் ஓனர்ஸ் மியுசுவல் பீ அன்ட் ஐ கிளப்
*கம்பனியின் புதிய பெயர்* : இந்தியன் ஓஷன் ஷிப் ஓனர்ஸ் மியுசுவல் பீ அன்ட் ஐ கிளப்
*கம்பனி பதிவு இலக்கம்* : ஜீஏ 2450
*கம்பனியின் பதிவு முகவரி* : # 10-03, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசெஸ் (பிறைவேட்),
கம்பனி செயலாளர்கள்.

5-255/1

---

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் 20.03.2013 ஆந் திகதி முதல் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : சிலோன் பீ அன்ட் ஐ கிளப் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 76768
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 10-03, ஈஸ்ட் டவர், வேர்ல்ட் ட்ரேட் சென்டர், கொழும்பு 01

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசெஸ் (பிறைவேட்),
கம்பனி செயலாளர்கள்.

5-255/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 07.03.2013 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : த குடுரிஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 91408
*பதிவு முகவரி* : இல. 379/3, செந்தினோ வலி வீட்டுத் திட்டம், ஹிம்புட்டான றோட், புதிய நகரம், முல்லேரியாவ

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசெஸ் (பிறைவேட்),
கம்பனி செயலாளர்கள்.

5-255/3

---

**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 28.03.2013 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : பயோ அக்ரி கொன்சோடியம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 79476
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 100/3, துட்டுகெமுனு வீதி, கொஹுவெல, தெஹிவளை
*கம்பனியின் புதிய பெயர்* : லீன் ஸ்ட்ரெடஜிக் ஒப்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02.
03.04.2013.

5-283

---

**பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பிரிமியோ ஃபுட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 91914
*திகதி* : 04.04.2013

*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 125, புனித ரொச்சஸ் மாவத்தை, தெல்லத்துர, ஜா-எல

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02.
09.04.2013.

5-285

---

**பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எப் அன்ட் வை அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 91875
*திகதி* : 03.04.2013
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 18, சென். அந்தோனிஸ் மாவத்தை, கொழும்பு 03

பிசினெஸ்மேட் (பிறைவேட்),
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02.
04.04.2013.

5-286

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிளீன் எனெர்ஜி வென்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 91712
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, மாச்சு 25
*பதிவு முகவரி* : இல. 370 ஏபி1, நாவலை வீதி, நாவலை

இயக்குநர்.

5-266

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : புத்தி என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 70487
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 04.01.2010
*பதிவு முகவரி* : இல. 186, கெசெல்வதுகொட, யக்கல

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல.291/32ஏ, ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05.

5-264

---

# ஏல விற்பனைகள்

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை வடக்கு, களுத்துறை பெத்த, களுத்துறை நகரசபை எல்லைகளுக்குள், தெசஸ்த்ர களுத்துறை, கோயில் வீதியில் அமைந்துள்ளதும் கோயில் வீதி, வரிமதிப்பு இல. 179/ஏ ஐக் கொண்டதும் "அமரகோன்வத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் வை. பீ. டீ சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 21 யூலை, 1994 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 555ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ;***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15.00பே.)***

**வரைபடம் இல. 555ஏ இல் குறிப்பிடப்பட்ட துண்டு இல. 9 (10 அடி அகல வீதி ஒதுக்கு) இன் மீதும் வழியேயுமான வழியுரிமையுடன் சேர்த்து**

**ஏல விற்பனை**

*(கடப்பாடுடையவரான இல்லியவரிகே சுதத் ரோஹண, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 03 ஏப்பிறல், 2010 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1908 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்.)*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்கள் 2013, மே 30 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.***- களுத்துறை கடிகார கோபுரத்திலிருந்து காலி வீதி வழியே களுத்துறை வடக்கு சந்தி மற்றும்

வலப்பக்கத்திலுள்ள கோவிலை அடைவதற்கு கொழும்பு நோக்கி ஏறக்குறைய 1 கிலோமீற்றர் செல்லவும். கோயில் வீதி (எத்தன மண்டலவிற்கு எதிரேயுள்ள வீதி), வரிமதிப்பு இல. 179/ஏ ஐக் கொண்ட விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு இவ்வீதியில் ஏறக்குறைய 350 மீற்றர் செல்லவும்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *26, ஏப்பிறல், 2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 26, ஏப்பிறல் 2013 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 3,000 ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், ''கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க., முகாமையாளர் - அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

பீ. கே. ஈ. சேனாபதி
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

5-288

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளேபற்று, கெஸ்பேவை பிரதேச சபை எல்லைகளுக்குள், எரவ்வலவில் அமைந்துள்ள தும் மொரகஹலந்த மாவத்தை, வரிமதிப்பு, இல. 021/11 ஐக் கொண்டதும் அலுபோகஹலந்த மற்றும் மொரகஹலந்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்ஹ அவர் களால் தயாரிக்கப்பட்டு 15 சனவரி, 2001 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5955 இல் குறிப்பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந் துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ;***

***உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பீ. ஜீ. டி. டி. ஜயவர்தன விக்கிரமசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 11 திசெம்பர், 1994 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1485 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 5 (பதினைந்து அடி அகல வீதிக்கான ஒதுக்கு) இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0று. 11.50பே.)***

**ஏல விற்பனை**

*(கடப்பாடுடையவரான ஹேவாவசம் என்டேரகே ரெரன்ஸ் சம்பத், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 13 திசெம்பர், 2011 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2268 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்.)*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 28 மே, 2013 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- மஹரகமையிலிருந்து அரவ்வல சந்தி வழியே பிலியந்தலை வீதியில் சென்று அரவ்வல சந்தியைக் கடந்து பிலியந்தலையை நோக்கி ஏறக்குறைய 1 கிலோ மீற்றர் சென்று மொரகஹலந்தை வீதிக்கு இடதுபக்கம் திரும்பி 100 மீற்றர் சென்று, இடப்பக்கம் திரும்பி இடப்பக்கத்தில் அமைந்துள்ள விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு 15 மீற்றர் செல்லவும்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *26, ஏப்பிறல், 2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 26, ஏப்பிறல் 2013 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 3,000 ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், ''கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க., முகாமையாளர் - அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667109, 2565573.

பீ. கே. ஈ. சேனாபதி
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

5-289

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - கொள்ளுப்பிட்டி கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏலவிற்பனை

### பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏலவிற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டி. சில்வா 23/10 மற்றும் 14.05.2007 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கங்கள் 976, 2147 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்தன 01.08.2008 மற்றும் 18.06.2009 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கங்கள் 3225 மற்றும் 3409 மூலம் கடன் எடுத்த பட்டபெண்டிகே ஏமண்த லலித் டி சில்வா மற்றும் கமகே பியலி தமயன்தி டி சில்வா முன்பு நானாயக்கார ஆகியோர் மேற்படி செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளில் தவறுசெய்துள்ளதால் செலுத்தவேண்டிய முழுத் தொகைகளை அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்கு அளித்துள்ள அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் என்னால் அதே இடத்தில் 20 ஆந் திகதி யூன் மாதம் 2013, மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச சபை எல்லையில் பத்தரமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கட்டிட இலக்கம் 39/26ஏ, போகாயேண றோட்டில் அமைந்துள்ள இக்காவத்த அல்லது மக்குலுகாவத்த காணியின் லொட் 15பி, இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம் எல்லாம் சேர்த்து**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10பே.)**

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 09.11.2012 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 12.11.2012 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- பத்தரமுல்லை சந்தியில் இருந்து கடுவலை றோட்டில் 700 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கம் உள்ள போகாயேண றோட்டில் 200 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கம் திரும்பி 10 அடி வாகனங்கள் செல்லும் றோட்டில் சென்று சப்ரோன் களச்சி காலயத்தில் முன்பு காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். மிகுதிக் கட்டணம் 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் முற்பணம் 10% திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

மேலதிக விபரங்களுக்காக.- மூத்த முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 ; தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனநாயக்க,
சமாதான நீதவான், உத்தரவுபெற்ற
ஏலதாரர், விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2445393.
தொலைநகல்இல. : 011-2396520.

5-260

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - பிலியந்தலை கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏலவிற்பனை

### பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏலவிற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிஸ் 26.03.2008 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இலக்கம் 196 இன்படி கடன் எடுத்த பிரதீப் றொசான் ரத்னாயக்க என்பவர் மேற்படி செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளைச் செலுத்தத்

தவறியுள்ளதால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ எனக்கு அளித்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி கொடுப்பனவுகள் மற்றும் செலவுசெய்யப்பட்ட முழுத்தொகைகளை அறவிடுவதற்காக கீழ் விபரிக்கப்பட்ட காணி என்னால் 07 ஆந் திகதி யூன் மாதம் 2013, மு. ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், கும்புக்கே பத்து ரயிகம் கோரலயில் ஹெரண பிரதேச சபை கிளை அலுவலகம் கணண்வில பலண்யுருவ கிராமத்தில் அமைந்துள்ள கிவலகாவயேண காணியின் நிலஅளவையாளர் டி. ஏ. தர்மசிரி 23.01.2008 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 3897 இல் காண்பிக்கப்பட்ட லொட் ஏ, இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாம் சேர்த்து**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0று. 26.2பே.)**

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 28.03.2013 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 02.04.2013 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- பிலியந்தலையில் இருந்து ஹெரண பிரதான வீதியூடாக 12 கிலோ மீற்றர் கோணபொல சந்தி வரை சென்று இடதுபக்கம் திரும்பி மொரகான றோட்டில் 500 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கம் உள்ள சமகி மாவத்தையில் (சர்வோதய சிறு பள்ளிக்கூடம்) தாண்டி 100 மீற்றர் சென்றபின் இடதுபக்கம் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். 30 நாட்களுக்குள் மிகுதிப் பணம் செலுத்தத் தவறினால் 10% முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணியை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

மேலதிக விபரங்களுக்காக.- மூத்த முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 ; தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனநாயக்க,
சமாதான நீதவான், உத்தரவுபெற்ற
ஏலதாரர், விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2396520.

5-261

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1046 5326 2131 - ஏ. புஷ்பராஜா மற்றும் எஸ். வாசுகி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.07.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 23.10.2009 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 21.10.2009 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பத்து இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து நூற்றுநான்கு ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 10,95,104.51) 2008, மாச்சு 28 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து தொளாயிரத்தொன்பது ரூபா தொண்ணூற்றிரண்டு சதம் (ரூ. 9,96,909.92) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதமும் (16%) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 31.05.2013 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்."

**அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹந்துன்முல்ல பிரதேச சபை செயலாளர் பிரிவின் ஹல்துமுல்ல கந்தபல்ல கோரலேயின் பிரதேச சபை எல்லைகளுக்குள் கிரவானகம கிராமத்தில் அமைந்த "விஹாரககல எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. செல்லஹேவா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, யூன் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 1259 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 இன் எல்லைகளாவன- வடக்கிற்கு : P வரைபடம் Ba 289 இன் லொட் 7 மற்றும் P வரைபடம் Ba 270 இன் லொட் 2 ; கிழக்கிற்கு : P வரைபடம் Ba 270 இன் லொட் 2 ; தெற்கிற்கு : P வரைபடம் Ba 270 இன் லொட் 2 மற்றும் P வரைபடம் Ba 289 இன் லொட் 9 மற்றும் மேற்கிற்கு : P வரைபடம் Ba 289 இன் லொட்கள் 7 மற்றும் 9 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தொன்பது தசம் ஐந்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0று. 39.53பே.) அல்லது சைபர் தசம் சைபர் ஒன்று சைபர் சைபர் ஹெக்டேயர்கள் (0.0100 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1259 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹந்துன்முல்ல பிரதேச செயலாளர் பிரிவின் ஹல்துமுல்ல கந்தபல்ல கோரலேயின் பிரதேச சபை எல்லைகளுக்குள் கிரவானகம கிராமத்தில் அமைந்த ''விஹாரககல (ஹபுத்தளை)'' என்றழைக்கப்படும் காணிக்கு நிலஅளவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1989, திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட P வரைபடம் Ba 289 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 8 இன் எல்லைகளாவன– வடக்கிற்கு : P வரைபடம் Ba 270 இன் லொட் 7 மற்றும் லொட் 2 ; கிழக்கிற்கு : P வரைபடம் Ba 270 இன் லொட் 2 ; தெற்கிற்கு : P வரைபடம் Ba 270 இன் லொட் 2 மற்றும் லொட் 9 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 7 மற்றும் 9 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தொன்பது தசம் ஐந்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 39.53பே.) அல்லது சைபர் தசம் சைபர் ஒன்று சைபர் சைபர் ஹெக்டேயர்கள் (0.0100 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. P வரைபடம் Ba 289 எனும் வரைபடத்திற்கு அமைவாக பதுளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO HL 3/5 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-293

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.